பதிவு எண் M. 4900 8-பக்கங்கள். தனிப்பிரதி 0-1-0

விடுதலை

சிறுவியது: 1924.

மாலை 23 } ஈரோடு 22-10-1949 சனிக்கிழமை } மலர் .7

கற்பனைச் சித்திரம்.

என் தம்பிமார்கள்!

★

"என்ன அண்ணா இன்னும் அப்பா! அப்பா! என்று உழுகிறாய்! அவர் புராணகாலமனிதர்--பார்ப்பனபக்தர்-பழமையின் பாதந்தாங்கி-பகுத்தறிவை மறுப்பவர்—பிற்போக்குவாதி! அவரை என் கட்டிக்கொண்டு அழுகிறாய்? அவர் கிடக்கட்டும் கிராமத்திலேயே! நாம் சிங்காரச் சென்னையிலே சிறு வீடு வாங்கிச் சிறப்பாக வாழ்வோம்!"

"நாம் சென்னையில் வாழத்தகுதியையும்-அதற்கான நிலையையும் நமக்களித்தது, நம் தந்தை நமக்கு இளமையில் அளித்த கல்வியல்லவா? இப்போது அவரைத் தனியே விடுவதா? அது நமக்கு ஏற்றதா?"

"நம் தந்தை நம்மை என்றைக்கு ஒரு வணக்கத்தையும்-கல்வியறிவு தந்தமைக்கு ஒருநன்றியையும் கூறி விட்டுப்போவோம் அண்ணா! இவரைக் கட்டிக்கொண்டு அழுவது நம் கௌரவத்திற்கே குறைவு-பிற்போக்குவாதி!"

"என்னப்பா திருக்குறளைப் போற்றுகிறாய்—புகழ்கிறாய்-பிரச்சாரம் செய்கிறாய்— குறள்மாநாடு நடத்துகிறாய்; ஆனால் "மகன் தந்தைக் காற்றும் நன்றி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" என்ற வள்ளுவர் வாக்கை மறந்துவிட்டாயே! அதற்கேடாக "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்" என்னும் குறள் வாக்குப்படி நடந்திருக்கிறாரே நம் தந்தை. நீங்கள் இப்படி பகுத்தறிவு வாதிகள் என்று கூறிக்கொண்டு முன்னுக்குப்பின் முரணாக நடக்கலாமா?"

"ஆம் நாங்கள் பகுத்தறிவுவாதிகள் தான்! எங்கள் பகுத்தறிவுதான் பிற்போக்கு வாதியுடன் வதியாதே என்கிறது! எங்கள் பகுத்தறிவு உங்கள் கூற்றை மறுக்கிறது அண்ணா!"

"என்னப்பா இளங்கன்று பயமறியாது என்பார்களே! அந்த முறையில் பேசுகிறீர்கள்! ஓட்டப்பர்களாக நாம் வெளியேறி எப்படி வாழமுடியும்? பணம் முழுவதும் தந்தையிடமல்லவா இருக்கிறது. சிறிதாவது சிந்தித்தீர்களா இதைப் பற்றி? எனவே வேண்டாம் விபரீதப்போக்கு! விட்டுவிடுங்கள் வீண் பிடிவாதத்தை!"

"என்ன அண்ணா நீங்கள் கூறுவது சுத்தப்பைத்தியக்காரத்தனமாய் இருக்கிறதே! நீதி மன்றம் இருக்கிறது-வழக்குத்தொடுத்தால் வாங்கித்தருவர் பெரும் பொருள் தந்தையிடமிருந்து. இந்த அரிச்சுவடி கூடவா தங்கட்குத்தெரியாது!"

"நீதிமன்றங்களின் நீண்டபடிக்கட்டுகளை ஏண்ணவேண்டுமென்ற ஆசையா? அப்படி ஏறினாலும் நீங்கள் நினைக்கும் பலன் கிட்டவே கிட்டாது!—சட்டம் தெரியாது சாற்றுகிறீர்கள்—இந்தச் சொத்து முழுவதும் நம் தந்தை சம்பாதித்தது! இது அவருக்கு உரிமையாகும் தற்காலச்சட்டப்படி. நம் பாட்டன் ஓட்டாண்டி! அவர் சம்பாதித்த சொத்தாய் இருந்தால்தான் நமக்கு உரிமையாகும்—இதுதானப்பா சட்டம்!

"சரி அண்ணா அதற்கும் ஒரு வழி இருக்கிறது!.....எப்படியாவது இக்கிழட்டுத் தந்தையைச் சரிசெய்து விட்டால்?—ஆம் விட்டது தொந்திரவு! தொலைந்தது சனியன்!" இந்த வார்த்தைகளை என் தம்பிமார்கள் மிகமிகச்சாதாரணமாகத்தான் துணிந்து கூறிவிட்டார்கள். சீறும் நாகம்—கொட்டும்தேள்—எரியும் நெருப்பு கொல்லும் விஷம் அத்தனையும் சேர்ந்து ஒருவனை ஒரு சேரத் தாக்கினால்—அவன் எத்தகைய நிலை அடைவானோ அத்தகைய நிலை அடைந்தேன் அச்சொற்களைக் கேட்டபோது! மூர்ச்சை அடைந்து கீழே சாய்ந்து விட்டேன்!

என் தந்தை ஒரு கிராமவாசி! சாதாரண படிப்புள்ளவர். புராணங்களிலே நம்பிக்கை அற்றவர்! எதையும் 'ஏன்' என்றுகேட்பவர்-'எப்படி' என்று சிந்திப்பவர்; மக்கள்படும் இடரை மாற்றி அமைக்க முடியும் எனும் மன உறுதிகொண்டவர்! சுருங்கச்சொன்னால் ஆஸ்திகத்தின் 'அணுகுண்டு'—புராணங்களின் 'டைனமிட்!' அவருக்குத் தான் நானும் என் தம்பிமார்களும் மக்களாகப் பிறந்தோம்! எங்களைப்படிக்கவைத்தார்! உலகத்தில் நாங்களும் பெரியமனிதர்களாக வாழவேண்டும் என்பதிலே அவருக்குத்தணியாத காதலுண்டு! நாங்களும் படித்தோம்—பகுத்தறிவுவாதிகளானோம்!

என் தந்தை தலைமயிரைப் பற்றிக்கவலை கொள்ளாதவர்—நாங்கள் 'கிராப்' வைத்து கௌரி கௌரியாகச்சீவி விடுவதிலே சிந்தனையைச் செலுத்துபவர்கள்! என் தந்தை பஞ்சாடை உடுத்துவதிலே பழக்கப்பட்டவர்—நாங்கள் பகட்டான சூட்டுப்போட்டுப் பக்குவப்பட்டவர்கள்! என் தந்தை 'பீடி சுருட்டை' காண்பதே 'பாபம்' எனக்கருதுபவர்—நாங்கள் 'சிகரெட்' குடிப்பதிலே சிறந்த நிபுணர்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

இங்கர்சால் சொற்பொழிவு

உண்மை.

தமிழாக்கம்: நெடுஞ்சேரலாதன்.

கோயில் அல்லது குரு அல்லது கொள்கை அல்லது புத்தகம்என்று இருப்பினும், அவைகளைவிடுத்துத் தனக்குத்தானே எல்லா திரைகளை தூக்கிவிடவும், எல்லா மறைவுகளை (படுதா) நீக்கவும், எல்லா சுவர்களை அளக்கவும், எல்லா வெளிகளை, எல்லா உயரங்களை, எல்லா ஆழங்களை அழிக்கவும், ஒவ்வொரு (மனித) அறிவிற்கும் உரிமை இருக்கிறது.

இயற்கையின் பெரும்பகுதி(புத்தகம்-Volume) எல்லாருக்குந் திறந்து விடப்படவேண்டும். அறிஞர்கள், நேர்மையானவர்களால் தான் இப்புத்தகத்தை படிக்க இயலும். பொறாமை எழினி ஒவ்வொரு பக்கத்தையும் இருளடைய செய்துவிடும். நேர்மையின்மை படித்துவிட்டு தவறா பொருள் கொடுக்கும்; கொடுமை அப்பொருளை ஏற்றுக்கொள்ளும். தெய்வீகத்தால் ஒரு வரியையாவது படிக்க இயலாது அல்லது சிறு சொற்றொடரையாவது உச்சரிக்க இயலாது. எனினும் இப்பெரும் பகுதி (புத்தகம்) எல்லா அறிவையும், எல்லா உண்மைகளையும், வைத்துள்ளது; அது ஒன்றேதான் சிந்தனைக்கான சிறந்தவழி. சிந்தனை உரிமை என்றால் எல்லாருக்கும் இப்புத்தகம் படிக்க உரிமை உண்டு என்று பொருள். இங்கே குருவும், கூலியும் சமமே. எல்லாரும் தானாகவே படிக்க வேண்டும், படித்ததை நேர்மையாக, அச்சமின்றி மற்றையோருக்கு எடுத்துக் கூறவேண்டும்.

கோயிலுக்கோ அன்றி பாதிரிக்கோ ஆதாரம் கிடையாது—எண்ணிற்கோ, அன்றி பெருவாரிக்கோ (மெஜாரிடி) ஆதாரம் கிடையாது. இயற்கை ஒன்றேதான் நாமறிந்த உண்மை ஆதாரம். உண்மைதான் ஏகபோனன், அறியாமையின்எதிரி, அறிவின் தொழிலாளியும், நண்பனுமாகும்.

அறியாமை அதிசயத்தின், ஆச்சரியத்தின், தெய்வீகத்தின், விசனத்தின், விரையத்தின், தேவையின் தாயாகும்.

அறிவு ஒன்றுதான் ஒளி. இது நம்மை முன்னேற்ற மடைய செய்து, தடைகளைநீக்கி, இயற்கை வன்மையை நமக்கு சாதகமாக்கி வைக்கிறது. இதுஒன்றேதான் மனிதனை உயர்த்தும் தூண்டுகோல். மூளையை விருத்திசெய்து உலகத்தை நாகரீகப்படுத்துவதாகும். அறிவு, இறக்கையுடைய பயங்கர உருவங்கள்(பேய்கள் கடவுள்கள்) கொண்ட மோட்சத்தை ஒழித்து, பேய்களையும், பெரும் பூதங்களையும் இருளினின்றும் ஓட்டி, அச்சக்குகைகளில் ஒளி வெள்ளம் பெருக்குகின்றது.

இயற்கைக்கப்பாற்பட்ட தெய்வீகம் இருப்பதற்கு ஆதாரமில்லை; கட்டை அல்லது கல்லுருவத்தின் முன் வளைபவனின்செய்கை, ஒரு கற்பனை கடவுளை (உருவமற்ற கடவுளை) வணங்கும் ஒருவனின் மூடத்தனத்தைப் போன்றதேயாகும்; எல்லா வழுத்தலுக்கும் ஓரே வித(மான) அடிப்படையான தவறு, மூடநம்பிக்கை, அச்சம் முதலியவைகளாலானதாகும்; ஒரு தனிப்பட்ட பேயை நம்பும் மூடத்தனத்தைப்போன்றதே, ஒருதனிப்பட்ட கடவுளை நம்புவது; சிறு பூதத்தை நம்புவது போன்ற மூடத்தனமே, பெரும்பூதத்தை நம்புவதுமாகும் என்பவைகளை எல்லாருக்கும் போதித்தாகவேண்டும்.

ஆகையினால் வன்மை(சக்தி)—இயற்கையின் உண்மை, பிரார்த்திப்பதினாலோ, வழுத்தலினாலோ, படைப்பாலோ, பூசைகளாலோ அல்லது பலிகளினாலோ கட்டுப்படுத்தவோ அல்லது மாற்றவோ முடியாது; மந்திரமோ, அதிசயமோ ஒன்றும்கிடையாது; வன்மையை(சக்தியை) வன்மையைக்கொண்டுதான் (சக்தியால் தான்) அடக்கமுடியும்; உலகம் முழுதுமே இயற்கைதான் என்பதை எல்லாருக்கும் போதிக்க வேண்டும்.

மனிதன் தன்னை தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டும், மனிதனை பற்றி கவலை கொள்ளும் இயற்கைக்கப்பாற்பட்ட வன்மை (சக்தி) கிடையாது, இயற்கைக்கு இரக்கமோ, வெறுப்போ கிடையாது. அவை மனிதனுக்காக வென்று எவ்வித மாறுபாடும் (கவலையும்) இன்றி இயங்குகின்றது. அவை காரணம் இன்றி உண்டாக்கியும், இரக்கமின்றி அழிக்கவும் செய்கிறது என்று எல்லோருக்கும் போதிக்க வேண்டும்.

பயனுடைய செயலே, உண்மை மதத்தின் அரும்பு, மலர் கனியாகும் என்பதை எல்லோருக்கும் கற்பிக்க வேண்டும். போப்பு, மடாதிபதி, பிஷப்பு, பாதிரி, புரோகிதர் என்னும் இவர்கள் எல்லாம் பயனற்றோர். அவர்கள் எதையும் உற்பத்தி செய்வதில்லை. அவர்கள் மற்றவர்களின் உழைப்பில் உயிர் வாழ்பவர்கள். அவர்கள் அஞ்சுபவர்களின் அச்சத்தில் உண்டு வாழ்பவர்கள். அவர்கள் நியாயமானவர்களின் குருதி உறிஞ்சும் உயிர்கள். எல்லா ஆலயங்களும் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு இரட்போனை (பிச்சைகாரனை) கொண்டுள்ளது. அவர்கள் ஒவ்வொருவரும் பிச்சை பரிசிலில் வாழ்கிறார்கள்- பலவந்தத்தாலும், அச்சத்தாலும் சேகரிக்கப்படும் பரிசில்கள் அவை. எல்லா அய்தீக ஆலயங்களும், மோட்சத்தை கொடுப்பதாக வாக்களித்தும், நரகத்தை காட்டி அச்சுறுத்தியும், இந்த வாக்குறுதியாலும், அச்சுறுத்தலாலும், பரிசிலையும், காணிக்கையும் சேகரிக்கின்றது. எல்லா ஆலயங்களும், "நம்பு, கொடு" என்று கதறுகின்றது.

ஒரு புது ஊழி உலகத்தின்மேல் உதயமாகின்றது. பயனுள்ள மதத்தில் நாம் இப்போது நம்ப ஆரம்பித்துள்ளோம்.

எந்த மக்கள் காட்டைகளைந்து திருத்தியவர்கள்; நிலம் உழுது கழனியாக்கியவர்கள்; ஆற்றைகடக்க, ஏற்ற இடைபாதைகட்டியவர்கள்; புகைத்தொடர்கள் கட்டியவர்கள்; கால் வாய்கள் வெட்டியவர்கள்; பெரும் கப்பல்கள், நீராவி இயந்தி

(தொடர்ச்சி 7-ம் பார்க்க)

உரிமை] # தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம். [ஆசிரியருக்கே

—(புலவர் குழந்தை)—

★

தலைவனிடம் நேரில் கூறமுடியாதமறைபொருள்களையெல்லாம் தலைவி யெதிரில் கூறமுடியாததையெல்லாம்- தோழிதலைவன் மறைவிலிருக்கும் போது அவனுக்குக் கேட்குமாறு சிறைப்புறமாகவே கூறுவாள்.

தலைவி களவுபுலப்படாமல் ஒழுகுதல்: தலைவன் மீது அளவு கடந்த காதல் உடையவளேனும், தலைவனை அரை நொடி பிரிந்து தனித்திருக்க முடியாத நிலைமையையுடையவளானாலும், அடக்கம், மனத்திண்மை, மனக் கோட்டமின்மை, களவின்கண் செய்யத் தகுவான கூறல், நன்மை தீமையை அறியும் அறிவு, உள்ளக் கருத்தறி தலருமை என்னும் பெண்பாற் குணங்களால் தலைவி தன்களவை வெளிக்குக் காட்டாமல் நடந்து கொள்வாள். பெண்மையின் பெருமையே பெருமை. இது கொண்டே வள்ளுவர், "கடலன்னகாமமுழந்தும் மடலேறாப்பெண்ணிற்பெருந்தக்கதில்" என்று பெண்மையின் மேம்பாட்டை நுணுக்கமாக எடுத்துரைத்தார்.

ஒருவழித்தணத்தல்: இடைவிடாது பாற்சோறும், தெம்பாகும், பாலும் தேனும் உண்டால் தெவிட்டுமல்லவா? அதற்காக இடையிடையே கைப்புச்சுவையும், புளிப்புச்சுவையும், காரமும் உண்பதுபோல, இருவகைக் குறியிடத்தும் இடையறாது புணர்ந்து வருந்தலைவன், அக்கூட்டம் தெவிட்டாமல் இருத்தற் பொருட்டு சிலநாள் குறியிடஞ் செல்லாமல் பிரிந்திருப்பான். இது ஒருவழித்தணத்தல் எனப்படும். தணத்தல்- பிரிதல். இப்பிரிவு அடிக்கடிநிகழும். அவ்வொரு வழித்தணத்தலாகிய இட்டுப்பிரிவுக்காலத்தையும் தலைமகள் ஆற்றாது வருந்துவாள். தோழி ஆற்றுவிப்பாள். எவ்வளவு அன்பு! இவ்வாறு அன்புற்று- அன்புக் கலப்புற்று- மணந்து கொண்ட தலைவர்கள் வாழ்க்கையன்றோ உண்மையான உயரிய வாழ்க்கையாகும்?

தாமே தூதுவராதல்: இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்னும் நான்கும் களவொழுக்கத்தின் உறுப்புக்கள் எனப்படினும் எல்லாக்க தலர்களும் இந்நான்கும் முற்றிமணந்து கொள்வதில்லை. சிலர், இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்பாடும் நிகழ்ந்ததும் மணந்து கொள்வதும் உண்டு. இன்றும் இத்தகைய மணங்கள் நடந்து வருகின்றன. சிலதடுக்கப்பட்டு விடுகின்றன. தடுப்பாரில்லாத அக்காலத்தே இவ்வகைமணமே பலவாக நடந்திருக்கலாம். காதலர்தாமே அன்புற்று மணந்து கொள்வதால் இது தாமேதூதுவராதல் எனப்படும். இயற்கைப் புணர்ச்சி முதலிய நான்கும் நிகழ்ந்து மணந்து கொள்வதென்பது ஒருசிலரிடம் நடந்து வந்த வழக்கமேயாகும். அதையே புலவர்கள் இவ்வாறு பலபடப் புனைந்து புலனெறிவழக்கம் செய்தனரென்க. முதலிரண்டும் நிகழ்ந்து மணந்து கொள்வதே எல்லாரும் ஏற்றுநடத்தக் கூடிய தொன்றாகும். அம்முறையையாயினும் இக்காலத்தமிழ் மக்கள் கைக்கொண்டால்தான் தமிழர்மரபு நின்று நிலை பெறும்.

வரைவுகடாதல்: இருவகைக் குறியினும் பலகாலும் வந்து தலைவன் தலைவியைக் கூடிச்செல்லுங் களவு வெளிப்படின் ஊரார் கூறும் அலருக் கஞ்சிச் சுற்றத்தார் தலைவியை வெளியில் சென்றுவர விடாமல் இற்செறிப்பார் என்றும், இருள் நிறைந்த இரவுநேரங்களிலெல்லாம், கொடிய விலங்குகளும், பாம்பு முதலிய நச்சுயிர்களும் உள்ள அரிய வழியில் வருவதால் தலைவனுக்கு ஏதாவது இடையூறு நேர்ந்தாலும்நேரக்கூடும் என்றும் தோழி அச்சமுற்று, இக்களவொழுக்கம் நமதுகுடிப்பிறப்புக்கும், பெருமைக்கும் ஏற்றதல்ல. இனி நீர் இவளை மணந்து கொள்வதே தகுதியாகும், என்று தலைவனிடம் கூறுவாள். இதுவரைவுகடாதல் எனப்படும். வரைவு- மணம். கடாதல்- வினாதல். மணந்து கொள்ளுதலைப்பற்றித் தலைவனிடம் கேட்டல்.

இவ்வாறு தோழி தலைவனிடம் கூறுதல் தலைவியின் குறிப்புணர்ந்தேயாகும். தலைவன் மாட்டன்பு முதிர்ந்ததலைவி, மிக்கஇருளிலும். கொடியவழியிலும் தலைவன் இரவுக்குறிக்கண் வருதல் தீதெனவும், மிகுந்த காவலுடையதெனவும், இவ்வாறு தலைவன் வருவதற்குத் தானே காரணம் மெனவும், வழியில் தலைவற்கு ஏதாவது இடையூறு உண்டாகுமோ எனவும் அஞ்சுதலேயாகும். முடிவாகத்தலைவி வெளிப்போக முடியாதபடி சுற்றத்தார் காவல் வைத்தனராயின் தோழி 'இவளை இனி மணந்து கொள்க' எனவே தலைவனிடம் கூறுவள்.

வெளிச்செல்ல முடியாத இற்செறிப்பினால் தலைவி தலைவன் மாட்டுக் கொண்டிருந்த அன்பும், குடிப்பிறப்புக் கேற்ற ஒழுக்கமும், தம்இன்பமும், நாணும் நீங்கநடப்பாள். இவ்வாறு தலைவி காக்கப்பட்டு வரும்போது வந்த தலைவன் பிரியக் கருதின், தோழியும் தலைவியும் நீர் போகின்றவழி கொடியது எனக்கூறித் தலைவன் செல்வதை விலக்குவார்கள். தலைவி தோழி மூலமாகவே கூறுவாள். அவ்வாறு கூறியுங்கேளாமல் தலைவன் தன் ஆற்றல்கூறிச் செல்லத்துணிந்தால், தலைவியும் உடன்வரக் கருதுவதா

(தொடர்ச்சி 6-பக்கம்)

குடி அரசு

22—10—49 சனிக்கிழமை.

பட்டாபிஷேகம்!

★

இராம இராஜ்ஜியத்துக்கு பட்டாபிஷேகம் 1950 ஜனவரி 26-ந் தேதி என்று வதிஸ்டர் வமிசத்தினர் நாள் குறித்துவிட்டனர். இராமாயண வதிஸ்டர், நாடாளக் குறிப்பிட்ட நாள், இராமன் காடேக வேண்டியநாள் ஆக ஆகிய இப்போது இந்துஸ்தான வதிஸ்ட வமிசத்தோர் குறிப்பிடும் இந்த 26 எப்படியும் மாறப்போவதில்லை என்று உறுதி கூறுகிறார்கள்.

நம் காங்காஸ் தோழர்கள் ஏகாதிபத்தியம் என்று சொல்லுவதற்குப்பதிலாகக் கண்டுபிடித்த மற்றொரு பழமையான—அர்த்த புஷ்டியான சொல் இராம ராஜ்ஜியம் என்பதை அவர்களே நெடுங்காலமாக விளக்கிவந்திருக்கிறார்கள்.

"ஏகாதிபத்தியத்திற்குப் புதைகுழி தோண்டிவிட்டோம்," "கண்காணாச்சீமைக்குக் கப்பலேற்றி விட்டோம்" என்று பேசிய அவர்களே, ஏகாதிபத்திய சிம்மாதனத்திற்கு அதைப்போன்ற மற்றொன்றே ஏற்றது என்றுமுடிவு கட்டிவிட்டார்கள். அந்த முடிப்பவுடிதான் இந்துஸ்தான் ஏகாதிபத்தியம் உருவாகிவிட்டது என்றுகூறி அதற்குப்பட்டாபிஷேகம் அதாவது அந்த ஏகாதிபத்தியம் ஆட்சிக்கு வரும் நாள் ஜனவரி 26 என்று கூறுகிறார்கள்.

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஏகாதிபத்தியம் என்கிற ஈபத்திற்கு ஜனநாயகம் என்கிற வெள்ளி முலாம் பூசப்பட்டிருக்கிறது. முலாம் பூசியதற்குப் பெரும் பொருள் செலவாகி ($1\frac{1}{2}$ கோடிரூபாய்) நீண்டகாலமும் (2-ஆண்டு) ஆகி ஏராளமானவர்கள் (385 பேர்) உழைத்த உழைப்பு என்பதாகவும் கணக்குப்போட்டுக் காட்டப்படுகிறது.

திராவிடத்தைப் பொறுத்தவரையிலும், ஈயத்தின் சுய ரூபம் வெகுவிரைவிலேயே கண்ணுக்குத் தெரிந்துவிடத்தான் போகிறது. ஏன்?

இந்துஸ்தானம் அல்லது ஏக இந்தியா அல்லது பூரண இராம ராஜ்ஜியம் என்கிற நினைப்பில்—மிருகபலத்தை அடிப்படையாகவைத்துக்கொண்டுதான் திராவிடத்தையும், திராவிடம் போன்ற வேறு நாடுகளையும் அதனதன் உண்மை கருத்துக்கு, ஏற்ற இடமில்லாத படிக்குத் தான்தோன்றித்தனமாக பலவந்தமாக இந்த அமைப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த அமைப்புக்கு யார்யாரை நியமித்தால், "ஆமாம்சாமி" போடுவார்கள் என்கிறதிட்டத்தின் மீதுதான் ஆரம்பத்திலேயே நபர்களும் நியமிக்கப்பட்டார்கள். இப்படி நியமிக்கப்பட்டவர்கள்கூட பணக்காரர்களுக்கும் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு மட்டும்தான் பிரதிநிதி என்று சொல்லக்கூடிய யோக்கியதையில், ஏகாதிபத்திய வெள்ளையர்களின் திட்டபடிக்கு இடம் பெற்றவர்கள். இப்படி இடம் பெற்ற இவர்கள், குறிப்பாக சென்னையில், திராவிடத்திற்கு உரிய பிரதிநிதிகள் அல்லவே அல்ல.

இப்படி நியமிக்கப்பட்டவர்களைக்கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்தை ஓரே கண்டமாக ஆக்குவதற்குத்தான் 2, 3 ஆண்டுகளும் $1\frac{1}{2}$ கோடி ரூபாயும் செலவழிந்தது என்கின்றனர். "இது ஒரு அரும் பெரும் சாதனை. இவ்வளவு காலமும் இத்துணைப் பொருளும் செலவழிந்திருப்பது நியாயந்தான்" என்கிற உணர்ச்சியையூட்டவேண்டுமென்கிற எண்ணத்தோடுதான் காலத்தைப்பெருக்கிச் சொல்லப்படுகிறது. ஏனென்றால் இந்த அ. நி. சபைக்கூட்டங்கள் வருஷக்கணக்கில் மூன்று என்று கூறப்பட்டாலும் மாதக்கணக்கில் 11 ஆகி, நாள்கணக்கில் 107 ஆகி மணிக்கணக்கில் 500, 600 என்று சொல்லக்கூடியகால அளவுதான் ஆகியிருக்கிறது. இவ்வளவு குறுகியகாலத்தில் "ஆமாஞ் சாமி" போடுபவர்களை வைத்துக் கொண்டு வகுத்திருக்கும் ஒரு திட்டத்துக்குத்தான், அவர்களே வெளியில் கூறுகிற கணக்கின்படி $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வியர்த்தமாக்கப்பட்டிருக்கிறது. எப்படியோ திராவிடத்தின் பங்குக்கு ஆக, 25, 30 இலட்சரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவு பெரும் பொருளைச் செலவுசெய்தும் இனித் திராவிடத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

வெள்ளை ஏகாதிபத்தியம் எத்தனையோ ஆயிரம் மடங்கு தேவலாம் என்று, சர்வசாதாரணமாக எல்லோரும் பேசக்கூடிய ஒரு நிலைதான் விரைவில் உண்டாகப் போகிறது. ஏனென்றால் "வெள்ளையர் நெடுந்தூரத்தில் இருந்து கொண்டு சுரண்டி, சுரண்டிக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக ஆவது இடையே சிலகாலம் கழிக்கவேண்டியதாய் இருந்தது. இந்த வடவர்களோ நம் பக்கத்தில் இருந்து கொண்டே இடைவிடாமல் சுரண்டுவதில் முனைந்திருக்கிறார்கள்" என்பதை வற்றவற்ற, சுரண்டப்பட்ட பிறகு ஆவது திராவிடன் உணரத்தானே வேண்டியதாய் வரும்.

வெள்ளையரின் ஏகாதிபத்தியத்தில், மாகாணங்கள் ஒரு அளவுக்குப் பெற்றிருந்த அதிகாரங்கள் எல்லாம், இப்போது இந்துஸ்தான் ஏகாதிபத்தியத்தில் பறிமுதல் செய்யப்பட்டு, ஒரு ஸ்தல ஸ்தாபன அளவில் மதிக்கத்தக்கதாய் ஆக்கப் பட்டுவிட்ட கொடுமைக்குத்தான் பூரண ஆதிபத்திய ஜனநாயகக் குடிஅரசு என்று முழக்கப்படுகிறது,

இந்தத்திட்டம் (பட்டாபிஷேகம்) நடைபெறவேண்டியதுதானா? திராவிடம் என்றைக்குமே மாறி மாறி அடிமையாகக்கிடந்து உழல வேண்டியதுதானா? என்றைக்குமே வடவர் தயவை எதிர்பார்த்துத்தான், கைகட்டி வாய்பொத்தி நின்று திராவிடன் வாழ்ந்தாக வேண்டுமா?

ஆம்! ஆம்!! என்கின்றனர் வடவர். அதுசரிதான் என்கின்றனர் நம் நாட்டுப் பார்ப்பனர்கள். ஆனால் திராவிடனின் மாற்றம் என்ன?

பாட்டாளி கட்சிக்குத் தடையா?

தோழியர் சி. ஆர். விசாலக்குமி.

வான்முட்ட கோபுரம் கட்டி, குட்டி சுவாமி ஒன்று வைத்து விட்டால் கோவில் என்றழைக்கின்றனர் நம் நாட்டில். இக்கோவிலை கட்டுவதற்கு, நிலைகுலைந்தாலும் மனம் குலையாமல் பாடுபடுபவன் பாட்டாளி என்பதை மறுக்க முடியாது. மலம் இருந்த இடமானாலும், அப்புறப்படுத்தி விட்டு, ஆழமான பள்ளம் தோண்டி, அதிலிருந்து கடைக்கால் எடுத்து கட்டிடம் ஏற்ற கஷ்டப்படுபவன் பாட்டாளி. கட்டிடம்ஏற்றும்போது கல் தவறி கைமீதோ, கால்மீதோ விழுந்துவிடும் ரத்தம்கசிந்துவரும். அடிபட்டதினால், ரத்தம் வந்துவிட்டதே இவ்வேலையை விட்டு விடலாம் என எண்ணி விலகுவானா அத்தொழிலாளி!?. போர் முனையிலே வீரன் கையில் எதிரியின் வாள் பட்டவுடன் எத்தகைய வீரம் பிறக்கிறதோ அஃதே போல் விழுந்த கல்லை வீரமாய் உற்று நோக்கி, கையில் எடுத்து தகுந்த இடத்தில் வைத்துக் காரையை பூசிவிட்டு, அதை கண்ணுற்றவாறே மறு வேலைசெய்ய முனைகின்றான். கடுத்த வெயிலாயிருந்தாலும் கட்டிடம் ஏற்றித்தானாக வேண்டும். ஆகவே ஆண்களோடு பெண்களும் அல்லற் படுவர் துணையாக. இவர்களை வேலை வாங்க வருபவனுக்கு பெயர் எசமான்! இவன் கண்ணியமான முறையிலே அவர்களை நடத்துவானா? சொகுசாக நிழல் இருக்கும் இடம் தேடி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு நிமிடத்திற்கொருதரம், "ஏய் கயிதே இந்தசெங்கலை தூக்கன் வா. நின்கொன் பாத்கொன்கிறியே. ஞாயித்துகாலமே ஆனதும் கூலிக்கு மாத்ர ஆஜராவா. செய்றி வேலை செய். தொர்சானி மாதிரி இர்குர்த்துக்கு வூட்லே ஒக்காந்திக்கோ இது ஒங்கொப்ப வூட்டு வேலே இல்லே" என்றும் இன்னும் எழுத முடியாத வார்த்தைகளை உபயோகித்து தமிழையும் கொலை செய்வான். அந்த பெண் என்னாங்க எசமா என்றவுடன், எடுத்து விடுவான் அரைநாள் கூலி. அதற்கு பயந்து, செங்கல் கூடையை தலைமீது சுமந்து "என்னே இந்நாட்டு முதலாளிகளின் நீதியும் நேர்மையும்" எனநினைத்தவாறு கண்ணீரைத்துடைத்தவாறே கலங்கி செல்வாள். ஏழைகளின் கண்ணீருக்கு ஏதுமதிப்பு! இவ்வளவுக்கும் நடுவே கட்டிடம் ஏற்றப்படும். அதனுள் மூலஸ்தான அறையும் கட்டி விடுவர். இந்த மூலஸ்தானத்திலேதான் கட்டிடத் தொழிலாளர் மலம் கழிப்பது, சிறுநீர் கழிப்பது. ஒருவேளை அங்குவேலை செய்யும் ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல் ஏற்பட்டால் காதல் நாடகத்தையும் அந்த மூலஸ்தானத்திலேதான் நடத்திவிடுவார்! கட்டிடவேலை ஆனவுடன் காளி வந்திறங்க வேண்டும்.

அண்ணாந்து பார்த்தால் ஆதாரமில்லாமல் ஆகாய விமானம்பறக்கிறதே அதுபோல, நமக்கென்று வீடு ஆகிவிட்டது. நாம் போய் இறங்கலாம் என அவளே வந்திறங்கி விடுவாளா? அதைக் கூடச் செய்பவன் தொழிலாளி! கல்தச்சனாலோ பித்தளை வேலைசெய்பவனாலோ, அல்லது மரத்தச்சனாலோதான் பிறக்கவேண்டும். ஆணும் பெண்ணும் சேர்ந்தால் எப்படி. ஆணோ, பெண்ணோ என்ற குழந்தை உற்பத்தியாகிறதோ அதுபோல், கல் தச்சன் கல்லோடு, பித்தளை வேலைக்காரன் பித்தளையோடு, மரத் தச்சன் மரத்தோடு மாரடித்தால் தான் மாதா உருவாகுவாள்! உருவாக்கும்போது கண்களோ, மூக்கோ ஏதோ ஒன்று சரியில்லை என்றால் முகத்தின் பாகத்தில் காலைநன்றாய் ஊன்றிவைத்து அதனைச் செதுக்குகின்றான். இவன் வேலை முடிந்ததும் அவளை அழகுபடுத்த ஓவியக்காரன் வருவான். வறுமையினால் வாட்டப்பட்டு, வயிற்றுக்கு ஒன்றுமில்லா விட்டாலும் தன்காதலியை கண்டமகிழ்ச்சியோஎன்னமோ வர்ணத்தை எடுத்து வரைய முற்படுகின்றான். தேவியின் தேகத்தை தன் காதலியின் தேகந்தான் என நினைத்துக் கொண்டு தீட்டுகிறான். அவன் வேலை முடிந்ததும் ஆடை தொழிலாளி சேலை நெய்வான். சேலை நெய்யும் போது ராட்டை படும்பாடு போல், அவன் உள்ளமும், இன்று பொழுதை எங்ஙனம் கழிப்பது, இது வரை ஆகாரம் ஒன்றுமில்லையே என மனம் புழுங்குவான். நெய்த சேலையை, மாகாளிக்கு அணிந்திருப்பதை மகிழ்ச்சியோடு நோக்குவான். காளிக்கு கவலை உண்டா? அவன் மனைவிக்கு சேலையில்லையே என்று. அவளோ நகைக்கு காத்திருப்பாள், தட்டான் நகைசெய்து தருவான். அதற்குப்பின் அம்மனுக்கு ஆர்த்தி எடுக்க பித்தளை தட்டு ஒளி வீச குத்து விளக்கு, ஓசை கிளப்ப கனமான மணி, குங்கமம், திருநீறு (மண்தான்) மாலை, கற்பூரம், தேங்காய் இன்னும் மிகுதி உள்ள பொருள்களனைத்தும் பாட்டாளியாலேதான் ஆக்கப்படும். இவை அனைத்தும் ஆன பின்னர் பராசக்திக்கு பாலும் பழமும், உண்ண உணவும் வேண்டுமல்லவா? அது உழவனின் தொழில். காலை ஆனதும் ஏர் பிடித்து, காளைகளை அதில் பூட்டி, கடினமான கழனியானாலும், உழுது எருவிட்டு, காலத்தோடு விதைவிதைத்து, நல்ல நீர் பாய்ச்சி, கதிர் முற்றி விளைந்தவுடன் அறுவடை செய்து களத்தில் சேர்த்து பின்னர் நெல் மணியாக்கி, அவர்களுக்கில்லாவிட்டாலும் அம்மைக்கு அளிப்பவன் பாட்டாளி!!

பராசக்தியை உண்டு பண்ணியவன் பாட்டாளி. ஆயிமகமாயிக்கு அழகும் ஆபரணமும் அளிப்பவன் பாட்டாளி; பலி கேட்பவளுக்கு நகை செய்து கொடுப்பவன் பாட்டாளி, இருக்க இடம் கட்டி கொடுப்பவன் பாட்டாளி, இருட்டிலேவேண்டாம், வெளிச்சத்திலிரு என்று விளக்கு செய்து கொடுப்பவன் பாட்டாளி, தேவிக்கு திருகு செய்து கொடுப்பவன் பாட்டாளி, உயிர்ப் பலி கேட்பவளுக்கு உணவளிப்பவனும் பாட்டாளியே தான்.

ஆனால்?! அவை அனைத்துக்கும் சர்வ அதிகாரி யார்? புரோகிதன் என்ற பார்ப்பனன். அன்று

அழகு நங்கையோடு காதல் மொழி பேசினானே அதே இடத்திலே தான் புரோகிதன் அம்மையை அர்ச்சனை செய்கிறான். தொழிலாளி செய்ததைத் தொட்டு கும்பிடுகிறான். பின்னர் தொழிலாளியையே எட்ட நில் கிட்ட வராதே என்று மிடுக்காக பேசுகிறான். தொழிலாளிக்கு எப்படி பார்ப்பனியம் துரோகம் விழைவிக்கின்றதோ, அது போல் இன்று நாட்டிலும் தொழிலாளிகளுக்கு துரோகம் விளைவிக்கின்றனர் நமது சர்க்கார். முதன் முதல் சுதந்திரத்திற்கு பாடுபட்டவர் பாட்டாளி மக்கள் தானே. வெள்ளையன் வீசிய வெடி குண்டுக்கு இரையானவர் பாட்டாளிமக்கள் தானே. அப்போது காதலனை இழந்து கதறியழுத கன்னியர்கள் எத்தனையோ பேர்! உடன் பிறந்தாரை பிரிந்து உள்ளம் குமுறியவர் எத்தனையோ பேர். தம் பிள்ளைகளை சுதந்திரத்திற்காக பறி கொடுத்து பதறித் துடி துடித்தபெற்றோர்கள் எத்தனையோ பேர்! சிலருக்கு கையொடிந்தும், கால் ஒடிந்தும், கண் போயும், இன்னும் எவ்வளவோ துன்பத்திற்குள்ளான பாட்டாளி மக்களைக் கொண்டு தானே சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்த பின் சுக மடைந்தவர் யார்?

இன்று முடி சூடா மன்னன் என புகழப்படுகிறாரே பண்டிதர் நேரு அவர்கள், அவரை இந்த நிலைக்கு கொண்டு வந்தது யார்? அழகுக்கோ, அல்லது தான் ஒரு சுதந்திர தீரன், தியாகி என்பதற்கு சின்னமாகவோ என்னவோ தலையில் அணிந்துள்ளாரே படகு போன்ற குல்லாய் அதைத் தைத்து கொடுத்தவர் யார்? அவர் அணிந்துள்ள வேஸ்ட்கோட், ஜிப்பா, அதற்கு தகுந்தாற்போல் முழுகால் சட்டை அதை தைத்து கொடுத்தவர் யார்? அவர் உட்கார மெத், மெத்தென இருக்கும் நாற்காலி செய்தது யார்? அவரும், அவரது தங்கை விஜயலக்ஷ்மி அம்மையாரும் அவ்வப்போது பல, பல நாடுகளுக்கு செல்லுகின்றனரே, நடந்தா போகிறார்கள். கஷ்டமின்றி போக கப்பல், வாஹனார்தி, ரயில் இவைகளை செய்தது யார்? அம்மையார் அணிந்துள்ள ஆடை நெய்தது யார்? அவர் கூந்தலைச் சரிப்படுத்தச் சீப்பு செய்து கொடுப்பது யார்?

அங்கே காளிக்கு தீட்டிய வர்ணம் கலைந்து விட்டால் அழகு கலைந்து விடும் எனக் கருதி மறுபடியும், மறுபடியும் தீட்டுகிறானே ஓவியன் அது போல அம்மையாருக்கு பவுடர், சோப், இன்னும் வாசனை திரவியங்கள், ஆபரணங்கள் இவைகளை செய்வது யார்? பசுக் கொலை கூடாது என்பார்கள். ஏன் என்றால்? பாவம் தாய் போலில்லையா என்பார்கள். ஆனால் தாயின் தோலை மாத்திரம் காலுக்குச் செருப்பாக மாட்டிக் கொள்கிறார்களே அச் செருப்பை தைத்து கொடுப்பது யார்? இவையனைத்தும் போக, நாக்கு ருசி தட்ட, வேளா வேளைக்கு எதைத் தின்றால் இனிக்கும் எதைத்தின்றால் சுவைக்கும் என சுவை பார்த்து, பார்த்து உண்ணுகின்றார்களே! அவைகளை செய்வது யார்? இது சுதந்திர நாடு என சொகுசாக பறக்கிறதே, சுதந்திர காங்ரஸ் கொடி அது யாரால் நெய்யப்பட்டது? எல்லாம் பாட்டாளி! பாட்டாளி! பாட்டாளி! என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

ஆனால்.....?

அங்கே தொழிலாளி செய்து கொடுப்பதைத்தொட்டுத் தொட்டுப் கும்பிட்டுவிட்டு, தொழிலாளி செய்து கொடுத்ததைக் கொண்டு தன் தொந்தியை வளர்த்துக் கொண்டு, தொழிலாளியையே, எட்ட நில், கிட்டவராதே என் கிறதே துரோகப் பார்ப்பனீயம் அது போல பாட்டாளியாலே பாராளும் மன்றம் ஏறி அவர்கள் உண்பது, உடுப்பது, உறங்குவது, உலாவுவது, யாவும் பாட்டாளி செய்து கொடுத்ததையே பதம் பார்த்துக் கொண்டு, பாதகப் பார்ப்பனீயம் விளைவிக்கும் துரோகத்தை விட மேலான துரோகம் பாட்டாளியின் கட்சிக்கு விளைவி கின்றனரே சுதந்தர சென்னை சர்க்கார் இது நியாயமும், நீதியும், நேர்மையும் ஆகுமா?

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கவும், அவளை அழைத்துக் கொண்டு போகும்படியும் தோழி கூறுவாள். அதற்குத்தலைவன், இவர்கள் சொன்னதையே திருப்பிச் சொல்லுவான். அதாவது, நான் செல்லும் வழி கொடியது; நீ வரத்தகாது என விலக்குவன்.

இவ்வாறு தலைவன் வந்து போய்க் கொண்டிருக்கையில், தலைவி பிரிவாற்றாது மிகவும் வருந்துவாள். அதனால், தோழி, இனிப் பகலில் அவள் வெளிவாவே முடியாது. புனங்காவலும் ஒழிந்தது. இரவிலோ காவல் மிகுதி. அவள் உன்மீது அளவுகடந்த காதலையுடையவளாய் இருக்கின்றாள். ஆகவே, இனி அவளைக் கட்டாயம் மணந்துகொள்வதே ஏற்றதாகும். மேலும், வளம்பொருந்திய உமது நாட்டையும், ஊரையும், வீட்டையும் காண எங்களுக்கு அளவற்ற ஆவல். உமது நற்குடிக்கும், நற்குடிப் பிறப்புக்கும், ஆண்மைச் சிறப்புக்கும் இனிக் காலந் தாழ்த்துதல் ஏற்றதல்ல எனத் தன் நிலைமையைத் தெளிவாக எடுத்துரைப்பாள்.

நொதுமலர் வரையக் கருதல்:— இனி, இவ்வாறு களவொழுக்க மொழுகி வருகையில் வேறு சிலர் வந்து தலைவியைப் பெண் கேட்பர். அவர்களிலொருவர்க்குத் தம் மகளைத் தருவதாகப் பெற்றோர் இசைவர். இது தலைவியின் களவு வெளிப்படாத காலத்தே நிகழ்வதாகும். அவ்வாறு பிறர் வரையக்கருதினால், அதைத் தலைவற்குக் கூறி, பிறருக்குக் கொடுப்பது உறுதியானால் அவள் இறந்துபடுவாள். ஆகையால், நீ மணந்துகொள்ளெனத் தோழி வற்புறுத்துவாள். நொதுமலர் அயலார்.

பிரிவு:- இவ்வாறு தலைவியும் தோழியும் வரைதல் வேட்கையுடையவர்களாய்த் தலைவனை வற்புறுத்திக் கொண்டிருக்கும்போது, தலைவன், வேந்தற்குற்றுழிப் பிரிவான். அப்பிரிவாற்றாது தலைவி வருந்துவாள். காவற்பிரிவும் நிகழும். ஒவ்வொரு தலைவருக்கும் இப்பிரிவுகள் நேராவெனினும், தலைவனது பொதுநலச் சிறப்பையும், ஆண்தன்மையையும், தலைவியின் பெண்தன்மையையும், தலைவன்மீது அவளுக்குள்ள காதலன்பையும் சிறப்பிப்பதற்காக இப்பிரிவுகள் நிகழ்வதாகக் கூறுதல் புலனெறிவழக்கமாகும்.

செவிலிசெயல்: இஃதிங்ஙனமாக, தலைவியிடத்தையங் கொண்ட செவிலியொருநாள் தோழியைப் பார்த்து, 'தலைவியின் கண்கள் ஏன் இப்படிக்கோவைப் பழம்

போலச் சிவந்திருக்கின்றன?' என்றனள். அதற்குத்தோழி, 'அன்னாய்' நாங்கள் இன்னொரு நன்னீர்ச்சுனையில் நீராடினோம். நான் சொல்லியுங்கேளாது தலைவி நெடுநேரம்வரையிலும் குடைந்து குடைந்து குளித்துக்கொண்டிருந்தாள். அதனால், கண்கள் சிவந்தன' எனக்கூறித் தாயின் அய்யத்தையகற்றினாள்.

தலைவன் பிரிவை ஆற்றாத தலைவியைச் சிலநாள் தோழி ஆற்றுவித்தாள். அதன்மேல் ஆற்றாமைமிக்கதலைவி வேளைக்கு வேளை உண்ணுவதில்லை. ஆடை அணிகளால் தன்னையணிசெய்து கொள்வதில்லை. யாரிடமும் சரியாகப்பேசுவதில்லை. தனக்குள்ளாகப் பித்திபோல் என்னென்னமோ பேசிக்கொள்வாள். தோழியரோடு சேர்ந்து விளையாடாமல் தனியாக ஓரிடத்தில் இருந்து நிலத்தைக்கீறிக்கொண்டிருப்பாள். அன்போடு அருமையாய் வளர்த்தபூவையையும், கிளியையும் கண்ணெடுத்தும் பாராள். உடம்பு இளைத்துத்துரும்புபோல் ஆகிவிட்டது. முகம் கருவழிந்துபோய்விட்டது. ஓடியாடி விளையாடும் ஆற்றலிழந்து படுத்தபடுக்கையானாள். இரவில் தூங்கும்போது என்னென்னவோ சொல்லித் தாறுமாறும் அரற்றலானாள். வெறிகொண்டவள் போலானாள். போலென்ன? வெறியேகொண்டாள்.

அதுகண்ட செவிலி அஞ்சினாள். கட்டுவிச்சியையும், வேலனையும் அழைத்துக் கட்டுங் கழங்கும் பார்த்துத் தலைவி வெறிகொண்டனளெனக் கூறினர். அதன்மேல் வெறியாடு களம் அமைத்து வேலனை வெறியாடித் தலைவிக்கு உற்ற நோய் இன்னதெனச் சொல்லும்படி கேட்டாள். அவன் வெறியாடித்தலைவி வெறிகொண்டாளெனவே கூறினான். இவ்வேலன் ஆடும் வெறியை முருகு எனவும், வேலனை முருகன் எனவும் கூறுதலும் உண்டு. அதன்பின் இன்ன செய்வதென்று தோன்றாத செவிலி தோழியை வினாவுவாள். தோழி நடந்ததைச் சொல்லுவாள். களவை அறிந்த செவிலி, 'இவர்கள் ஒழுக்கம் நன்றாக' எனத் தெய்வத்தை வாழ்த்துவாள்.

வெறியென்பது-இன்று மகளிர் பேய்பிடித்ததென ஆடுவதும், அதனால் உடல் நலிவடைவதும் போன்றதொரு மனநோய். இது பெரும்பாலும் காதல் தடையினால் ஏற்படும் மனமாற்றத்தாலுண்டாகும் ஒருவகை மனநோயேயாகும். இது பெரும்பாலும் நடுத்தரக்குடும்பப்பெண்களுக்கே பெரிதும் உண்டாகும். பேய்பிடித்தல் என்பது அச்சத்தினால் ஏற்படுவதுபோல, இது காமத்தால் ஏற்படுகிறது. இக்காலப்பெண்களாடும் பேயாட்டங்களில் பல அச்சமும், காமமும் கலந்தனவேயாகும்.

வேலன்-வேலைக் கையில் கொண்டு வெறியாடுவதால் பெற்ற பெயர். வேலர்-குறிஞ்சி நில மக்களில் குறிசொல்லும் ஒருவகுப்பார். கட்டுவிச்சியர்-வேலர் மகளிர். வேலன் கழங்கினாலும், கட்டுவிச்சி கட்டினாலும் குறிஞ்சி நிலமக்களுக்குக் குறி சொல்லிவருவர். கழங்கு பார்த்தல்-கழற்சிக் காய்களைக் கொண்டு குறிபார்த்துப் பலன் சொல்லுதல். இன்று தொட்டியர் என்னும் வகுப்பார் 12 கழற்சிக் காய்களைக் கொண்டு குறிபார்ப்பது போன்றதாகும் இது. கட்டெடுத்தல்- முறத்தில் நெல்லையிட்டு முக்கூறுசெய்து, ஒரு கூற்றைக்கொண்டு ஒற்றை, இரட்டை பார்த்து அதற்குத் தகப் பலன் சொல்லுதல்

வேலன் வெறியாடியும் பலன் சொல்வான். இன்று பூசாரிகள்-சாமியாடிகள்-சாமியாடி வாக்குச் சொல்லுவதுபோல் வேலனும் வெறியாடிப் பலன் சொல்லிவந்தனன். வெறியால்- வேலைக் கையில்கொண்டு வெறி கொண்டாடுதல். வெறி- ஆவேசம். குறிகேட்டல், வெறியாடல் என்னும் இத்தன்னம்பிக்கையற்ற மூடச்செயல்கள் அக்காலத்திலேயே மக்களிடைப்புகுந்து விட்டன. புறத்திணையில் வெறியாட்டு- கூத்துவகைகளில் ஒன்றாகும். இது காந்தன் எனப்படும். வள்ளி என்பதும் இதன் வகையிலொன்றே. இது மகளிர் ஆடுவது.

5. அறத்தொடுநிலை: தன்னைப் பிறர்க்குக் கொடுக்கக் கருதினும், கட்டுவிச்சியும், வேலனும் கட்டெடுத்தும், கழங்குபார்த்தும் வெறியாடியும் வெறிபிடித்தாளெனக்கூறினும் தலைவி தன்கருத்தைச் செவிலிக்குக்கூறும்படி தோழியிடம் கூறுவாள். இது அறத்தொடு நிலை எனப்படும். அறம்-ஒழுக்கம். அறத்தொடு நிற்றல்-தான் கொண்ட ஒழுக்கத்தின் கண் நிற்றல் அதாவது-களவு முதிர்ந்து கற்பொழுக்கத்தின்கண் நிற்றலை வெளியிடுதல் வரைந்துகொள்தலை வெளியிடுதல். தோழி செவிலிக் கறத்தொடு நிற்பாள். செவிலி நன்றாய்க் கறத்தொடு நிற்பாள். நற்றாய், தந்தை தன்னையர்க் கறத்தொடு நிற்பாள்.

தோழி செவிலிக் கறத்தொடு நிற்கும்போது, 'அன்னாய்! நாங்கள் அன்றொருநாள் தினைப்புனத்தில் குருவி முடுக்கிக்கொண்டிருந்தோம். ஓர் ஆண்யானை வெறிகொண்டு எங்களை நோக்கிவந்தது. அதுகண்டு நாங்கள் அஞ்சி அலறினோம். அப்போது ஓர் ஆடவன் வில்லுங் கையுமாக வந்து அக்களிற்றை போட்டியெம்மைக்காத்தான்.

(தொடரும்)

—○—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள், பொறிகள் கண்டுபிடித்தவர்கள்; மக்களின் எண்ணற்ற தேவைகளை நிறைவு படுத்தியவர்கள்; தொலை உச்சரிப்பு, அதற்கான கம்பிகளை கண்டுபிடித்தவர்கள்; மின்சார பொறியை நன்மைக்குப் பயன்படுத்த — சிந்தனையாலும் அன்பாலும் பயன்படுத்த-கம்பிகளில் செலுத்தியவர்கள்; தறியும், பொறியும் கண்டுபிடித்து உலகத்தை உடுத்தியவர்கள்; அச்சுகளையும், பெரும் அச்சகங்களையும்ஏற்படுத்தி, நிலத்தை கவிதைகளாலும், கற்பனை நவீனங்களாலும், உண்மைகளாலும் நிரப்பி,குழவியின் அறிவை வளரச் செய்து காப்பாற்ற முனைந்தவர்கள்; அதிசய பொறிகளை கண்டுபிடித்து; அழகுறகட்டைகளாலும், எஃகாலும் அச்சுவார்த்து, நாம் பயன் படுத்த கொடுத்தவர்கள்; மோட்சத்தை அழித்து, தாரகைகளின் நிலையை தேடியறிந்தவர்கள்; உலகவரலாற்றை மலை தொடர்களிலும், ஆழ்ந்த அலை கடலிலும் அறிந்தவர்கள்; வாழ்க்கையை நீடித்தும், வலியின் காரணங்களையும் அறிந்தவர்கள்; உலகை ஒளியால் நிரப்பிய பெரும் தத்துவ வாதிகள் — இயற்கை வாதிகள்; மனித உள்ளத்தை சிந்தனையால் அழகுபடுத்திய பெரும்கவிஞர்கள்; வெறும் தாளை பேசவும், கல்லை

வாழவும் செய்த பெரும் ஓவியர்கள் —சிற்பிகள்; உலகையே கட்டுப்படுத்திவிட்ட பெரும் சொற்பொழிவாளர்கள்; தம்முள்ளங்களை ஒலிக்குக்கொடுத்துவிட்ட இசை அமைப்போர்; தொழில் தலைவர்கள்; உற்பத்தியாளர்கள்; உண்மைக்காக களம் புகுந்த இராணுவத்தார்கள்; பயனுள்ள மக்களுக்குப்பெரும் விருந்தளிப்போர்—இவர்கள் தான் நம்முடைய கிருஸ்துக்களும், நம்முடைய சீடர்களும், நம்முடைய துறவிகளுமாகும். விஞ்ஞானத்தின் எழில்தான் நம்முடைய அதிசயங்கள். இயற்கை உண்மை நிறைந்த புத்தகமே, நம்முடைய புனித மறை; எல்லா அணுக்களிலும், எல்லா தாரகைகளிலும், எல்லா உயிர்களிலும் வாழ்ந்து, வளர்ந்து, சிந்திப்பவைகளிலும், நம்பிக்கையிலும், இன்னலிலும் இயங்கும் 'வன்மை' தான் கடவுளாக இருக்க இயலும்.

இல்லாதவற்றை நம்மால் தெரிந்துகொள்ளமுடியாது; இயற்கையின் எல்லைக் கப்பால் நம்மால் செல்லவும் இயலாது. எல்லா தொழிலும் நம்மியல்புக்கு அடங்கியதாகவே இருக்கவேண்டும்; நம் முதவிகள் எல்லாம் இங்கேயே, இந்த உலகத்திலேயே செய்யப்பட்டாக வேண்டும். நாம் அன்பு கொண்டு தொழிலாற்றுவோம். நாம் பொறுமையாக இருந்து தொழிலாற்றுவோம். நாம் வீரத்தையும் மகிழ்ச்சியையும் உழுவோமாக; நம் மிதயத்தை நன்மைக்குத் திறந்துவைப்போமாக; நம் எண்ணத்தை உண்மைக்குத் திறந்துவைப்போமாக உரிமையான வாழ்வு வாழ்வோமாக. எதிர்காலம் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும், நமக்குக் கொண்டுவருமென்று நம்புவோமாக; மேலும், இதற்கப்பால் நாம் நம்முடைய உளத்தூய்மையை காப்பாற்றுவோமாக.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்! என் தந்தை எளிமையே! உருவானவர்—நாங்கள் ஆடம்பரத்தின் அடிமைகள்! இத்தனைவேறுபாடு! அவருக்கும் எங்களுக்கும் எதனால் இந்த வேறுபாடு? யாரால் வந்தது இத்தகு நிலை! எங்களுடைய பட்டணப் படிப்பும், அதனால் ஏற்பட்ட பகட்டான வாழ்வும் அல்லவா எங்களை இத்தகுநிலைக்கு ஆளாக்கியது!

என் தந்தை எங்களுக்காக-எங்கள் நலனுக்காக-எங்கள் பிற்கால நடப்பிற்காக ஒரு ஏற்பாடுசெய்தார்! எங்கள் சொத்திலே சில சீர்திருத்தம்—சில மாறுதல்—அதுவும் எங்கள் நலனைமுன்னிட்டு—நாங்கள் நலமாக வாழவேண்டும் என்ற காரணத்தால். ஆனால், என் தம்பிமார்களுக்கு வந்தது கோபம்! கண்ணீர்த் துளிகளைச் சிந்தினர்—கண்டனக் கணைகளை எண்ணினர்!

"என்னப்பா விபரீதம்!" என்றேன்.

"என்ன அண்ணா! நாம் எவ்வளவு படித்தவர்கள்! மேல் நிலையில் உள்ளவர்கள், நம்மைக்கலக்காமல் எப்படி நம் தந்தை இந்தக் காரியத்தைச் செய்யலாம்? முடியாது! முடியாது! முடியவே முடியாது! என்று குதித்தனர்!

என்னதான் படித்தாலும் பெரிய பதவிகளை அடைந்தாலும் என் மனம் மட்டும் அடிக்கடி என் தந்தையைப்பற்றியே சிந்திக்கும். "அவர் அன்று படிக்கவைக்காவிட்டால்?" என்று எண்ணும் போது, அவர் நமக்கு எவ்வளவு தான் மாறுபட்ட கருத்துக்களையும் செய்கைகளையும் உடையவராய் இருந்தாலும் அவரைப்போற்றிப்போற்றித்தள்ளாத காலத்திலே தளராத ஊக்கங்கொடுத்து அவர் மனம்கோணாமல் நடப்பதுதானே நம்கடன், என்று என்னுள்ளம் துள்ளியெழும்!

என் தம்பிமார்களின் சதித்திட்டம் எப்படியோ வெளியில் தெரிந்துவிட்டது. ஊரார் பலர் பலவிதமாகப்பேச ஆரம்பித்தனர். அடுத்தவீட்டு அழகப்பன் அழகாகக் கூறுகிறான்; "படித்தவன்களாம்-மகாபாதகன்கள்! பகுத்தறிவு வாதிகளாம்-படுமோசக்காரன்கள்! வயதானகாலத்தில் தந்தை எவ்வித தவறு செய்தாலும்கூட வைத்துத் தாங்கவேண்டியது தனயன் கடமையாய் இருக்க, தந்தையையே வேறுக்கத்திட்டமிடும் தறுதலைகள்!" என்று

என்தம்பிமார்கள் "இதையெல்தாம் காதில் வாங்கிக் கொள்வதாய் இல்லை." என்னப்பா! ஊரே கைகொட்டி சிரிக்குமே, நாம்தனிக் குடித்தனம் நடத்தினால் தந்தையைத் தள்ளிவிட்டு" என்றேன்.

ஊராருக்கு என்னதெரியும் நம் பகுத்தறிவு செய்யும் பகட்டான வேலைகளைப்பற்றி!" என்று கூறுகிறார்கள். எங்கள் ஊரில் உள்ள ஏனையதோழர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் தந்தைகளைப்பாதுகாக்கத்தான் செய்கிறார்கள். அவர்களையெல்லாம்விட என்தந்தை அப்படியொன்றும் பிரமாத தவறு செய்துவிடவில்லை. இளமைதொட்டு எங்கள் நலனில் கண்ணும் கருத்துமாயுள்ளவர். மற்றவர்களைப்போல் எங்களையும் மாடுமேய்க்கவிடாமல் துள்ளித் திரிகின்றகாலத்தே எங்கள் துடுக்கடக்கி பள்ளிக்கனுப்பிய பாராட்டுதலைப் பெற்றவர் தான்—அதன் பலனைத்தான் இப்பொழுது அனுபவிக்கிறார்.

என் தம்பிமார்கள் எவ்வளவோ முயன்றும் நான்மட்டும் இடம் கொடுக்கவில்லை. அவர்கள் என்னையும் சேர்த்துச் சபித்துவிட்டுத் தனிக்குடித்தனம் தொடங்கிவிட்டார்கள்-நான் எப்படி என் தந்தையைப்பிரிய முடியும்! எங்களுக்காக உழைத்த தந்தை-எங்களைப் பள்ளிக்கனுப்பிய தந்தை-படிக்கவைத்ததந்தை-எங்கள் நலனில் கவலை கொண்ட தந்தை—எங்கள் முன்னேற்றம் கண்டு மகிழ்ந்த தந்தை—எங்கள் நலனே தன் நலனாகக் கொண்ட தந்தை-எங்கள் கிராமத்தில் யாரும் தங்கள் மக்களைப் பள்ளிக்கனுப்பாத போது எங்களைமட்டும் துணிந்தனுப்பி எங்கள் முற்போக்கைக்கண்டு மகிழ்ந்த தந்தை-எங்கள் வாழ்விற்கே தங்கள் சாதாரண வசதியையும் மறந்து உழைத்த தந்தை-இவரை எப்படிப்பிரியமுடியும்? நீங்களே கூறுங்கள்!

உடன் பிறந்த தம்பிமார்கள் பக்கத்தில் இல்லையே, ஓடிவிட்டார்களே என்று எண்ணும்போது வருத்தந்தான் வருகிறது. ஆனால் நான் வழியினின்றும் தவறவில்லை கடமையைச் செய்கிறேன் என்று எண்ணும்போது வருத்தம் மறைந்து வளமை பூக்கிறது!

—"சோழன்"

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.